1972 மார்ச் 21]

இப்போது மதுரை நகரை மாநகராட்சியாக மாற்றினும் என்றால், அந்த நகரம் 5½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களையும், 2 கோடி வருமானத்தையும் பெறத் தக்க அளவுக்கு நிலையை அடைந்திருந்தது. அதே அளவுக்கு திருச்சி வரும் சூழ்நிலையில் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சியில் வருமானம் இருக்கிறது. மக்கள் தொகையும் ஏறத்தாழ இருப்பதன் பயனாக, கோவை நகராட்சி மன்றத்தில் அதை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி தகவல் இல்லை. அப்படி ஒரு தீர்மானம் வந்திருக்குமானால் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும். அதற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு அமையுமானல் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(ஒரு உறுப்பினர் அவைக்குள்ளிருந்துகொண்டே பக்கத்திலுள்ள அதிகாரிகள் இருப்பிடத்திலுள்ள ஒரு அதிகாரியிடம் பேசிக்கொண்டு இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குள் இருந்துகொண்டு அதிகாரிகளோடோ, மற்றவர்களோடோ பேசுவது முறையானது அல்ல. அது தவிர்க்கப்படவேண்டும்.

கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்

* 601 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள Directorate of Rural Development. அலுவலகத்திற்கு வாடகை ஏதேனும் தரப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

1972 மார்ச் 21]

(இ) மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூபாய் 12,480 தரப் படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் துறைக்காக ஒரு தனி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே ஒரு கட்டடத்தைக் கட்டி, வாடகை இல்லாமல் இருப்பது பற்றி பரிசீலனையில் இருந்ததே, அது தற்போது எந்த நிலையில் உள்ளது? இனிமேலாகிலும் தனிக் கட்டடம் கட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முயற்சி எதுவுமில்லை. தனி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு பெரிய செலவு ஏற்படும். அப்படி செலவு ஏற்பட்டால், வாடகை இல்லாமல் வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடலாம். இப்பொழுது கொடுக்கப் படுகின்ற வாடகை ஓரளவுக்கு மற்ற துறைகளில் கொடுக்கப்படுவதை விட குறைந்து இருக்கிறது. சொந்த அலுவலகம் ஏற்பட்டால், வாடகை இல்லாத சூழ்நிலை ஏற்படும். அதுபற்றி நிதிவசதி ஏற்படும் பொழுது கவனிக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளுக்கானத் தேர்வுக் குழுக்கள்.

*602 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கக் கல்லூரிகளில் மாணவர்களைப் பொறுக்குவதற்கான தேர்வுக்குழுவில் அக்கல்லூரிகளில் பணிபுரியும் அரிசன ஆசிரியர்கள் உறுப்பினராக தற்போது சேர்க்கப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், எந்தெந்த அரசாங்கக் கல்லூரிகளில் உறுப் பினராக இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) அரசர் கல்லூரி, புதுக்கோட்டை.
அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாசலம்.
கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர்.
அரசினர் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள சட்டக்கல்லூரியில் மாணவர்களைப் பொறுக்குவதற்கான தேர்வுக்